1996 பிப்ரவரி 28]

சுகாதார நிலையங்கள் வந்து விடுகின்ற காரணத்தால் இதைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பில்லை. எதிர்காலத்தில் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 142, திரு. க. பழனிசாமி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. மு. நடேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

142—

எடப்பாடியை தனி வட்டமாக அறிவித்தல்

***38549**—திரு. க. பழனிசாமி :*

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியை சங்ககிரி வட்டத்திலிருந்து பிரித்து, தனி வட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை*

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி பகுதியானது தனி வட்டமாகப் பிரிப்பதற்கான அனைத்து வசதிகளையும் பெற்றிருக்கிறது. மேலும் சங்ககிரிக்கு வருகிற தூரமானது மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டிலேயே இது தனி வட்டமாகப் பிரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆம்' என்று சொன்னாலும் இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் அதை 'இல்லை' என்றுதான் மாற்றிக்கொள்ள வேண்டியதாகயிருக்கிறது. சங்ககிரி வட்டம் 7 உள்வட்டங்களைக் கொண்டுள்ளது. அது சங்ககிரி கிழக்கு, சங்ககிரி மேற்கு, தேவூர் போன்ற சிறிய வட்டங்களை கொண்டது சங்ககிரி வட்டம். எனவே சங்ககிரி வட்டத்தைப் பிரித்து எடப்பாடி தொகுதியை உள்ளடக்கிய வட்டம் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆம் என்று சொன்னதை இல்லை என்று திருத்திக்கொள்ளலாமா? (குறுக்கீடு) அது 'இல்லை' என்று திருத்திக்கொள்ளப்படுகிறது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 143, திரு.கு.சீனிவாசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

143—

துயர் தணிப்பு பயிற்சி முகாம்

***108490—திரு. கு. சீனிவாசன் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசிடம், இயற்கைச் சீற்ற துயர் தணிப்பு பயிற்சி முகாம் நடத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசு இயற்கைச் சீற்ற துயர் தணிபபதற்கு அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக பல முகாம்களை நடத்தி ஆவன செய்து கொண்டு வருகின்றது.

முற்பகல் 10.25

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இயற்கைச் சீற்ற துயர் தணிப்பு பயிற்சி முகாம் நடத்தப்படுவதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இயற்கைச் சீற்ற துயர் துடைப்பு பயிற்சி முகாம்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கு நடத்தப்படுகிறது? எத்தகைய நபர்களுக்கு அது தரப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல்,வெள்ளம், நிலநடுக்கம், நிலச்சரிவு, தீ போன்றவைகளுக்கெல்லாம் முன்னெச்சரிக்கையாக அதை எப்படியெல்லாம் சமாளிக்கவேண்டும், என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதற்காக, அண்ணா இன்ஸ்ட்டிட்யூட் ஆப் மேனெஜ்மென்ட் என்ற இடத்தில் நடத்தப்படுகிறது. இன்றைக்கு எல்லோருக்கும் தொடர்பாக இருக்கிற வருவாய்த் துறை அதிகாரிகள் மற்றுமுள்ள அதிகாரிகளுக்கெல்லாம் அந்தப் பயிற்சி கொடுத்து அந்தப் பயிற்சி மூலமாக எப்படி விரைவிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையும் என்னென்ன பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பது பற்றியும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.